بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْم نَحْمَدُهٗ وَنُصَلِّي عَلٰى رَسُوْلِهِ الْكَرِيْم وَعَلٰى عَبْدِهِ الْمَسِيْحِ الْمَوْعُوْد

**பத்ர் போரில் கலந்து கொண்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகத்துவமிக்க சஹாபியான ஹஸ்ரத் முஆஸ் பின் ஹாரிஸ் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு**

சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் இலண்டனிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 17 ஏப்ரல் 2020 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

தஷஹ்ஹுத், தஅவ்வுத் மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:

இன்று பத்ர் சஹாபாக்களில் ஹஸ்ரத் முஆஸ் பின் ஹாரிஸ் (ரலி) அவர்களைப் பற்றி குறிப்பிடுவேன். ஹஸ்ரத் முஆஸ் அவர்களின் தந்தையார் பெயர் ஹாரிஸ் பின் ரிஃபா ஆகும். இவரது தாயார் பெயர் அஃப்ரா பின்த் உபைத் ஆகும். ஹஸ்ரத் முஆஸ் மற்றும் அவரது இரு சகோதரர்கள் அவ்ஃப் மற்றும் ஹஸ்ரத் முஅவ்விஸ் ஆகியோர் பத்ர் போரில் கலந்து கொண்டனர். ஹஸ்ரத் அவ்ஃப் மற்றும் ஹஸ்ரத் முஅவ்விஸ் பத்ர் போரில் ஷஹீதாகி விட்டனர். ஹஸ்ரத் முஆஸ் பிற்காலத்தில் நடந்த எல்லாப் போர்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டார். ஹஸ்ரத் முஆஸ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் முதலாவது பைஅத் அக்பாவின்போது மக்காவில் பைஅத் செய்த எட்டு பேர்களில் ஒருவர் ஆவார். அதுபோன்று ஹஸ்ரத் முஆஸ் இரண்டாவது பைஅத் அக்பாவிலும் கலந்து கொண்டார்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: ஸாலிஹ் பின் இப்ராஹீம் தமது தந்தைவழிப் பாட்டனார் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்களிடமிருந்து அறிவிக்கிறார். அவர் கூறுகிறார்: நான் பத்ர் போரில் அணியில் நின்று கொண்டிருந்தேன். நான் எனது இரு புறமும் பார்த்தேன். சிறிய வயதை உடைய இரு அன்ஸாரி சிறுவர்கள் நிற்கிறார்கள். அந்தோ! எனது இரு புறமும் இவர்களை விட திடகாத்திரமான இளைஞர் நின்றால் நன்றாக இருந்திருக்குமே? என்று நான் ஏக்கம் கொண்டேன். அப்போது அவ்விருவரில் ஒருவர் என்னிடம், தந்தையின் சகோதரரே! அபூஜஹ்லை உங்களுக்குத் தெரியுமா? என்று கேட்டார்.

அப்போது நான் அவனிடம், உனக்கு என்ன வேலை உள்ளது? என்றேன். அதற்கு அவர் கூறினார். அவன் கூறினான்: (அபூஜஹ்ல்) ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை ஏசிப் பேசுவதாகக் கேள்விப்பட்டேன். எனது உயிர் எவனிடம் உள்ளதோ அந்த இறைவன் மீது ஆணையாக! நான் அவனைக் கண்டால் எவரது முடிவு முதலில் நிர்ணயிக்கப்பட்டுள்ளதோ அவர் இறந்து போகும் வரை எனது கண்கள் அவனது கண்களை விட்டு விலகாது என்று கூறினான். இதனைக் கேட்டு எனக்கு ஆச்சர்யம் ஏற்பட்டது.

பிறகு மறுபுறம் நின்ற பையன் என்னைக் கையால் இடித்து, அவனும் அதேபோன்று கேட்டான். சிறிது நேரம் கழிந்திருக்கும். நான் அபூஜஹ்லை மக்கள் மத்தியில் சுற்றி வருவதைக் கண்டேன். நான் அவர்களிடம், பாருங்கள்! இவனைப் பற்றிதான் நீங்கள் என்னிடம் கேட்டீர்கள் என்றேன். இதனைக் கேட்டு இருவரும் விரைவாக தமது வாளை எடுத்துக் கொண்டு சென்று அவனை எந்தளவு தாக்கினார்கள் எனில் அவனை கொன்று விட்டனர். பிறகு திரும்பி ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் வந்து செய்தியைக் கூறினர். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், உங்களில் எவர் வெட்டினார் என்று கேட்டார்கள். இருவருமே நான்தான் என்று கூறினர். அன்னார் அவர்களிடம், உங்கள் வாளைக் கழுவி விட்டீர்களா? என்று கேட்டார்கள். அவர்கள் இல்லை என்றனர். அன்னார் வாளை வாங்கிப் பார்த்தார்கள். பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், நீங்கள் இருவருமே அவனை வெட்டியுள்ளீர்கள் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் இந்த சம்பவத்தை விளக்கியவாறு கூறுகின்றார்கள்: அபூஜஹ்ல் பிறந்தபோது பல வாரங்களாக ஒட்டகங்கள் அறுக்கப்பட்டு மக்களிடைய அதன் மாமிசம் பங்கு வைக்கப்பட்டது. அவனது பிறப்பின்போது முரசடித்து மக்காவின் வீதிகளில் தெரிவிக்கப்பட்டது. பிறகு அவன் பத்ர் மைதானத்தில் மரணித்தபோது 15 வயதுடைய இரு அன்ஸாரி சிறுவர்கள் அவனை வீழ்த்தி காயமுறச் செய்தனர்.

அப்துல்லாஹ் பின் மஸ்வூது கூறுகிறார்: போர் முடிந்து மக்கள் திரும்பிச் செல்லும்போது நான் மைதானத்தில் காயமுற்றவர்களைக் காணச் சென்றேன். நான் போர்க்களத்தில் சுற்றி வந்து கொண்டிருக்கும்போது என்ன பார்த்தேன் என்றால், அபூஜஹில் காயமுற்றுக் கிடக்கின்றான். நான் அவனிடம் சென்றபோது அவன் என்னிடம், நான் தப்பிக்க வழியில்லை. அதிகக் காயம் ஏற்பட்டு விட்டது. நீரும் மக்காவாசியாவீர். நான் ஒரு விருப்பத்தைத் தெரிவிக்கிறேன். நீர் எனது வேதனை அகலுவதற்காக என்னைக் கொன்று விடு. நான் அரபுகளின் தலைவர் என்று நீர் அறிவீர். அரபுகளின் வழக்கம் தலைவர்களின் தலைகளை சற்று நீளமாக இருக்குமாறு வெட்டப்படும். அது கொலை செய்யப்பட்டவரின் தலைமைத்துவத்தைக் காட்டும் அடையாளமாகும். எனது விருப்பம் நீர் என் தலையைச் சற்று நீளமாக இருக்குமாறு வெட்ட வேண்டும் என்று கூறினான்.

அப்துல்லாஹ் பின் மஸ்வூது கூறினார்கள்: நான் அவனது தலையைச் சற்று சிறிய அளவாக வெட்டினேன். உனது இறுதி ஆசை கூட நிறைவேறாது என்று கூறினேன்.

இறுதி விளைவைப் பொருத்தமட்டில் அபூஜஹிலின் மரணம் எத்தகைய இழிவான மரணமாக இருந்தது. அவனது கழுத்து எப்போதும் உயர்ந்தே இருந்தது. மரணத்தின்போது அவனது கழுத்து சிறியதாக வெட்டப்பட்டது. அவனது இறுதி ஆசை கூட நிறைவேறவில்லை.

ஒரு கூற்றின்படி முஆஸ் (ரலி) பத்ர் போரில் காயமுற்றார்கள். மதீனா திரும்பிய பிறகு இந்தக் காயத்தினால் வஃபாத் ஆனார்கள். ஒரு கூற்றின்படி உஸ்மான் (ரலி) கிலாஃபத் காலம் வரை உயிருடன் இருந்தார். ஒரு கூற்றின்படி ஹஸ்ரத் அலி (ரலி) உடைய கிலாஃபத் காலம் வரை உயிருடன் இருந்தார்கள். அவரது மரணம் அலி மற்றும் முஆவியாகவுக்கிடையில் நடந்த ஸிஃப்பீன் போரில் நிகழ்ந்தது. ஸிஃப்பீன் போர் 36 அல்லது 37 ஹிஜ்ரியில் நடந்தது. ஹஸ்ரத் முஆஸ் ஹஸ்ரத் அலி சார்பாக போர் செய்தார்கள்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: இப்போது நான் கண்ணியத்திற்குரிய ஃபிரோஸுத்தீன் முன்ஷி சாஹிபின் மகனான மதிப்பிற்குரிய ராணா நயீமுத்தீன் சாஹிப் அவர்களைப் பற்றி குறிப்பிடுவேன். இவர்கள் 19 ஏப்ரல் 2020 அன்று மரணமடைந்தார்கள். இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்.

ராணா சாஹிப் 1934 ஆம் ஆண்டு பிறந்தார்கள்.இவர்களது தந்தையார் ஃபிரோஸுத்தீன் சாஹிப் அவர்கள் 1906 –ல் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் கடிதம் மூலம் பைஅத் செய்தார்கள். இவர்களது மனைவி பெயர் சாரா பர்வீன் ஆகும். இவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சஹாபியான தவ்லத் கான் சாஹிபுடைய மகன்வழிப் பேத்தியாவார்.

மர்ஹூம் அவர்கள் 1955 நவம்பரில் இருந்து 11 மே 1959 வரை சிறப்புப் பாதுகாப்புப் பிரிவில் Guard ஆக பணியாற்றினார். ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) விரிவுரை எழுதும் பணிக்காக நக்லா ஜாபாவுக்குச் சென்று வந்தார்கள். அப்போது இவர்களை பாதுகாப்பிற்காக அழைத்துச் சென்றார்கள்.

1978 –ல் பாதுகாப்புப் பணியில் இருந்து ஓய்வு பெற்றார்கள். பிறகு இவர் சாஹிவால் மாவட்டத்தின் ஹட்ப்பா என்ற இடத்திற்குச் சென்று விட்டார்கள். அங்கு காதிம் மஸ்ஜிது ஆக சேவை செய்தார்கள். அப்போது அக்டோபர் 1984 –ல் அஹ்மதிய்யா பைத்துல் திக்ரில் எதிரிகள் தாக்குதல் தொடுத்தனர். அப்போது இவர்கள் அங்கு பாதுகாப்புப் பணியில் இருந்ததால் அவர்கள் தாக்குதல் தொடுத்தபோது இவர் அதற்கு பதிலடி தந்தார். அதில் ராணா நயீமுத்தீன் சாஹிபுடன் 11 பேர் மீது வழக்கு தொடுக்கப்பட்டது. ராணா சாஹிபுக்கு 26 அக்டோபர் 1984 முதல் மார்ச் 1994 வரை இறைவழியில் சிறை செல்லும் வாய்ப்பு கிடைத்தது.

இராணுவ நீதிமன்றமானது முரப்பியான முனீர் சாஹிப் மற்றும் ராணா நயீமுத்தீன் சாஹிப் இருவருக்கும் மரண தண்டனை வழங்கியது. இந்தத் தீர்ப்புக்கு எதிராக முறையிட்டதில் லாஹூர் நீதிமன்றம் மார்ச் 1994 –ல் விடுதலை வழங்கியது. சிறையில் போலீஸ் சார்பாக மிகவும் சித்ரவதைக்கு உள்ளானார்கள். அவர்களிடம், கலீஃபாவின் மெய்காப்பாளர்களாக நீங்கள் இருந்ததால் உங்களிடம் முஸ்லிம்களைக் கொல்லுமாறு கட்டளையிட்டு அனுப்பினார்கள் என்று கூற வைக்க முயற்சி செய்தனர். ராணா நயீமுத்தீன் சாஹிப் இந்த வழக்கில் இருந்து விடுதலையான பிறகு 1994 –ல் இலண்டன் குடிபெயர்ந்தார்கள். இங்கும் தமது வயதிற்கேற்ப அன்றி அதைவிட அதிகமாக பாதுகாப்புப் பணிகளில் பணி செய்து கொண்டே இருந்தார்கள்.

மர்ஹூம் நினைவாக ஒரு மகன் நான்கு மகள்கள் உள்ளனர். இவரது மகன் ராணா வஸீம் அஹ்மது மற்றும் நான்கு பெண் பிள்ளைகளும் இலண்டனில் தான் இருக்கிறார்கள்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் ஒரு கடிதத்தை ராணா நயீம் சாஹிப் அவர்களுக்கு எழுதினார்கள். அதில் இவ்வாறு எழுதப்பட்டிருந்தது:

உயர்ந்த ஈமான் மற்றும் உறுதியுள்ள பாறையின் மீது நிற்கிறீர்கள். இது பெருமிதம் கொள்ளத்தக்கது. அல்லாஹ்வை உடையவர்களுக்கு உயரிய தகுதி கிடைக்கும் முன் இதுபோன்ற கஷ்டங்களைச் சகிக்க வேண்டியது ஏற்படுகிறது. உங்களுக்கு கிடைத்த நற்பேறு குறித்து பொறாமை ஏற்படுகிறது. மரம் அதன் பழத்தால் அறியப்படுகிறது. நீங்களும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது மரத்தின் பசுமையான கிளைகள் ஆவீர்கள். மேலும் சுவைமிகுந்த கனிகளாவீர்கள். அல்லாஹ் வீணாக்க மாட்டான். அல்லாஹ் தனது மலக்குகள் மூலம் உதவி செய்வானாக. எதிரிகளின் பிடியிலிருந்து ஈடேற்றம் தருவானாக. அல்லாஹ் உங்களுடன் இருப்பானாக.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ் மறுமையிலும் இவர்களுடன் அன்பான முறையில் நடந்து கொள்வானாக. மேலும் தனது அன்பிற்குரியவர்களின் இடத்தில் இடமளிப்பானாக. நான் இவர்களை சிறு வயதிலிருந்து அறிவேன். எங்களுடன் அப்போதிருந்தே நல்ல பரிவுடன் நடந்து கொள்வார்கள். மேலும் கிலாஃபத்திற்கு பிறகு என்னுடனான இவரது நடைமுறையே முற்றிலும் வேறு.

அல்லாஹ் இவரது பிள்ளைகளுக்கும் பற்றுணர்வுடன் தந்தையின் அடிச்சுவட்டின்படி நடப்பதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக. இன்ஷா அல்லாஹ் இவரது ஜனாஸா காயிப் தொழுகையை மற்றொரு சமயத்தில் தொழ வைப்பேன்.

இறுதியில் தற்போதுள்ள நோய் சம்பந்தமாக கூற விரும்புகிறேன். நமது அஹ்மதி நோயாளிகளும் சிலர் இருக்கிறார்கள். அவர்களுக்காக துஆ செய்யுங்கள். அவர்களுக்கு அல்லாஹ் முழுமையான விரைவான குணம் நல்குவானாக. நம்மையும் அவனது விருப்பத்தின் வழியில் நடத்துவானாக. உரிய முறையில் இபாதத் செய்வதற்கும், அடியார்களின் உரிமையை வழங்குவதற்கும் நமக்கு நல்வாய்ப்பு வழங்குவானாக. வெகு விரையில் இந்த பேராபத்து நம்மை விட்டு விலகிச் செல்லட்டுமாக. உலகிற்கும் புரிதலையும் அறிவையும் வழங்குவானாக. அவர்கள் ஓரிறைவனை கண்டறிவார்களாக. அவனுக்கு இபாதத் செய்யக் கூடியவர்களாக திகழ்வார்களாக. அவர்கள் ஏகத்துவத்தை அடையாளங்கண்டு கொள்வார்களாக.. அல்லாஹ் அனைவர் மீதும் கருணை காட்டுவானாக.

**மொழியாக்கம்: முஅல்லிம் நிஸாமுத்தீன்**